செய்தி வெளியீடு எண்: 81 நாள்:16.05.2021

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அனைத்து சட்டமன்ற கட்சித்தலைவர்கள் கூட்டம் 13.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றாக பின்வரும் தீர்மானம் (தீர்மானம் எண்.4) நிறைவேற்றப்பட்டது.

> ‘‘நோய்த்தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்க, சட்டமன்ற கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களை கொண்ட ஒரு ஆலோசனை குழு அமைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது”

2. மேலே தெரிவிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், அனைத்து சட்டமன்ற கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில்** பின்வரும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படுகிறது.

## ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

| வ. எண். | தமிழக சட்டமன்ற அரசியல் கட்சி | சட்டமன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1. | திராவிட முன்னேற்ற கழகம் | மருத்துவர் நா.எழிலன் |
| 2. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் | மருத்துவர் சி. விஜய பாஸ்கர் |
| 3. | இந்திய தேசிய காங்கிரஸ் | திரு.ஏ.எம். முனிரத்தினம் |

| | | |
|---|---|---|
| 4. | பாட்டாளி மக்கள் கட்சி | திரு. ஜி.கே. மணி |
| 5. | பாரதிய ஜனதா கட்சி | திரு. நயினார் நாகேந்திரன் |
| 6. | மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் | மருத்துவர் தி. சதன் திருமலைக்குமார் |
| 7. | விடுதலை சிறுத்தைகள் கட்சி | திரு. எஸ்.எஸ். பாலாஜி |
| 8. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | திரு. வி.பி. நாகை மாலி |
| 9 | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | திரு. தி. ராமசந்திரன் |
| 10. | மனித நேய மக்கள் கட்சி | முனைவர் ஜவாஉறிருல்லா |
| 11. | கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி | திரு.ரா.ஈஸ்வரன் |
| 12. | தமிழக வாழ்வுரிமை கட்சி | திரு.தி.வேல்முருகன் |
| 13. | புரட்சி பாரதம் | பூவை திரு ஜெகன் மூர்த்தி |

3. மேற்படி ஆலோசனை குழுவானது அவசர அவசியம் கருதி நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆலோசனைகள் பெற அவ்வப்போது கூடி விவாதிக்கும். இக்குழுவிற்கு பொதுத்துறை செயலாளர் உறுப்பினர் செயலராக செயல்படுவார்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**